ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகன் அருளிய

அடைக்கலப்பத்து

This document has been prepared by

Sunder Kidāmbi

with the blessings of

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

அடைக்கலப்பத்து

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்ற ச்சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேற ப்போமளவும் வாழ்வு

‡ பத்தி முதலாம் அவற்றில்⋆
பதி எனக்குக் கூடாமல்⋆
எத்திசையும் உழன்றோடி⋆
இளைத்து விழும் காகம் போல்⋆⋆
முத்திதரும் நகர் ஏழில்⋆
முக்கியமாம் கச்சி தனில்⋆
அத்திகிரி அருளாளர்க்கு⋆
அடைக்கலம் நான் புகுந்தேனே ॥ **1** ॥

சடைமுடியன் சதுர்முகன் என்று⋆
இவர் முதலாம் தரம் எல்லாம்⋆
அடைய வினைப் பயன் ஆகி⋆
அழிந்துவிடும் படி கண்டு⋆⋆
கடி மலராள் பிரியாத⋆
கச்சி நகர் அத்திகிரி⋆
இடம் உடைய அருளாளர்⋆
இணை அடிகள் அடைந்தேனே ॥ **2** ॥

தந்திரங்கள் வேறின்றித்⋆
தமது வழி அழியாது⋆
மந்திரங்கள் தம்மாலும்⋆
மற்றும் உள்ள உரையாலும்⋆⋆
அந்தரம் கண்டடி பணிவார்⋆
எல்லார்க்கும் அருள் புரியும்⋆
சிந்துர வெற்பிறையவனார்⋆
சீலம் அல்லதறியேனே ॥ **3** ॥

காகம் இராக்கதன் மன்னர்⋆
காதலி கத்திரபந்து⋆
நாகம் அரன் அயன் முதலா⋆
நாகநகரார் தமக்கும்⋆⋆
போகம் உயர் வீடு பெறப்⋆
பொன் அருள் செய்தமை கண்டு⋆
நாகமலை நாயகனார்⋆
நல் அடிப் போதடைந்தேனே ॥ **4** ॥

உகக்கும் அவை உகந்து⋆
உகவா அனைத்தும் ஒழிந்து⋆
உறவு குணம் மிகத் துணிவு பெற உணர்ந்து⋆
வியன் காவல் என வரித்து⋆⋆
சகத்தில் ஒரு புகல் இல்லாத்⋆
தவம் அறியேன் மதிட்கச்சி⋆
நகர்க் கருணை நாதனை⋆
நல் அடைக்கலமாய் அடைந்தேனே ॥ **5** ॥

அளவுடையார் அடைந்தார்க்கும் ⋆
அதன் உரையே கொண்டவர்க்கும் ⋆
வளவுரை தந்தவன் அருளே ⋆
மன்னிய மா தவத்தோர்க்கும் ⋆⋆
களவொழிவார் எமர் என்ன ⋆
இசைந்தவர்க்கும் காவலராம் ⋆
துளவ முடி அருள் வரதர் ⋆
துவக்கில் எனை வைத்தேனே ॥ **6** ॥

உமதடிகள் அடைகின்றேன் என்று ⋆
ஒரு கால் உரைத்தவரை ⋆
அமையும் இனி என்பவர் போல் ⋆
அஞ்சல் எனக் கரம் வைத்து ⋆⋆
தமதனைத்தும் அவர் தமக்கும் ⋆
வழங்கியும் தாம் மிக விளங்கும் ⋆
அமைவுடைய அருளாளர் ⋆
அடி இணையை அடைந்தேனே ॥ **7** ॥

திண்மை குறையாமைக்கும் ⋆
நிறைகைக்கும் தீ வினையால் ⋆
உண்மை மறவாமைக்கும் ⋆
உள மதியில் உகக்கைக்கும் ⋆⋆
தண்மை கழியாமைக்கும் ⋆
தரிக்கைக்கும் தணிகைக்கும் ⋆
வண்மையுடை அருளாளர் ⋆
வாசகங்கள் மறவேனே ॥ **8** ॥

சுருதி நினைவிவை அறியும்⋆
துணிவுடையார் தூய் மொழிகள்⋆
பரிதி மதி ஆசிரியர்⋆
பாசுரம் சேர்ந்தருக்கணங்கள்⋆⋆
கருதி ஒரு தெளிவாளால்⋆
கலக்கம் அறுத்தத்திகிரி⋆
பரிதி மதி நயனம் உடைப்⋆
பரமன் அடி பணிந்தேனே ॥ **9** ॥

‡ திருமகளும் திருவடிவும்⋆
திருவருளும் தெள் அறிவும்⋆
அருமை இலாமையும் உறவும்⋆
அளப்பரிய அடி அரசும்⋆⋆
கருமம் அழிப்பளிப்பமைப்பும்⋆
கலக்கம் இலா வகை நின்ற⋆
அருள் வரதர் நிலை இலக்கில்⋆
அம்பென நான் அமிழ்ந்தேனே ॥ **10** ॥

‡ ஆறு பயன் வேறில்லா⋆
அடியவர்கள் அனைவர்க்கும்⋆
ஆறும் அதன் பயனும் இவை⋆
ஒரு காலும் பல காலும்⋆⋆
ஆறு பயன் எனவே கண்டு⋆
அருளாளர் அடி இணை மேல்⋆
கூறிய நற்குண உரைகள்⋆
இவை பத்தும் கோதிலவே ॥ **11** ॥

அடிவரவு — பத்தி சடை தந்திரம் காகம் உகக்கும் அளவு உமது திண்மை சுருதி திருமகள் ஆறு அமலன்

அடைக்கலப்பத்து முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்